(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW13 |
| Name | : | **Thiru.A.Raja** |
| Father's Name | : | Thiru.Arangasamy |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **February 2026.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மானாமதுரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஏற்கனவே சிவகங்கை ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 09.11.2011 அன்று காலை 10.00 மணியளவில் நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது திருப்பூரைச்சேர்ந்த ஆறுசாமி மகன் திரு.முருகசாமி

என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று ஊ.த.க துறை தென்சரக காவல் காண்காணிப்பாளரின் அனுமதி மற்றும் அறிவுரை பெற்று சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண். 11/2011 பிரிவு 7 ஊ.த.சட்டத்தின் படி கீழடி மின்வாரிய உதவி மின்பொறியாளர் திரு.மீனாட்சிசுந்தரம் என்பவர் மீது ஒரு வழக்குபதிவு செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அந்த முதல் தகவல் அறிக்கையில் வாதியின் கையொப்பம் பெற்று நகல் வழங்கினேன். அந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் வாதியின் புகார் மனு ஆகியவற்றை சிவகங்கை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் அரசு சாட்சிகளாக செயல்படும் தலா ஒரு B–குரூப் அலுவலரை அன்று பகல் 1.30 மணிக்கு சிவகங்கை ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு சிவகங்கை மாவட்ட கருவூலக அலுவலர் மற்றும் சிவகங்கை மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர் அவர்களுக்கும் தனித்தனியாக வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். என்னிடம்

காண்பிக்கப்படும் **மேற்கண்ட இரண்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் உள்ளடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடிதங்களில் பெற்றுக்கொண்டதற்கான ஒப்பம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கின் வாதி முருகசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதியை எமது அலுவலகத்தின் மற்றொரு அறையில் இருக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

3. வாதியின் நம்பகத்தன்மை மற்றும் எதிரி மீனாட்சிசுந்தரத்தின் நடவடிக்கை பற்றியும் ரகசியமாக விசாரணை செய்து அறிந்து கொண்டேன். அதன் பின்னர் அன்று பகல் 1.30 மணிக்கு சிவகங்கை மாவட் கருவூலக அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றும் திரு.V.கோபால் என்பவரும் சிவங்கங்கை மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் மாவட்ட சுகாதார புலனாய்வு மைய உதவி இயக்குநராக பணியாற்றும் திரு.S.சம்பத் அவர்களும் எனது அலுவலகத்தில் வந்து என்னை சந்தித்தனர். அவர்களிடம் அவர்கள் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேன். அவர்களை ஒரு குற்ற வழக்கின் அரசு சாட்சிகளாக இருப்பதற்காக அழைத்திருப்பதாக விபரம் சொன்னேன். பின்னர் அரசு சாட்சிகளாக இருப்பதற்கு அவர்களும் சம்மதம்

தெரிவித்தனர். அதன் பின்னர் அலுவலகத்தின் மற்றொரு அறையில் இருந்த வாதி முருகசாமியை எனது அறைக்கு அழைத்து வாதியை மேற்படி அரசு சாட்சிகளுக்கும், அரசு சாட்சிகளை வாதிக்கும் பரஸ்பர அறிமுகம் செய்துவைத்தேன்.

4. வாதியின் எழுத்துமூலமான புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்ட சிவகங்கை ஊ.த.கபிரிவு குற்ற எண்.11/2011 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலை அரசு சாட்சிகளிடம் கொடுத்து அதை படித்துப்பார்க்கும்படி கூறினேன். அதில் உள்ள விபரங்களை வாதியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கூறினேன். அதன்படி அவர்களும் வாதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர். இவ்வழக்கின் எதிரி கீழடி மின்வாரிய அலுவலகத்தில் உதவி மின்பொறியாளர் திரு.மீனாட்சி சுந்தரம் என்பவர் வாதியிடம் அவரது பிளீச்சிங் யூனிட் ஆரம்பிப்பதற்கு மின் இணைப்பு கோரப்பட்டதன்படி EB லைன் புதிதாக அமைத்து தருவதற்காக லஞ்சமாக ரூ.10000/- கேட்டு அதன்படி பொறிவைப்பு நடவடிக்கைக்காக அவருக்கு கொடுக்க சம்மதித்து கொண்டு வந்திருந்த பணத்தை ஆஜர் செய்யுமாறு வாதியிடம் கேட்டேன். வாதியும் எட்டு ரூ.1000/- நோட்டுக்களும் மற்றும் நான்கு ரூ.500/- நோட்டுக்களும் ஆக மொத்தம் ரூ.10000/-ஐ எடுத்து வாதிஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுகளின்

எண்களை அலுவலகத்தில் ஒவ்வொரு நிகழ்வுகள் குறித்தும் பதிவு செய்ய தயார் செய்யப்பட்ட மகஜரில் குறித்துக்கொள்ளப்பட்டது.

5. நான் சொன்னபடி தலைமை காவலர் திரு.சிவகுமார் என்பவர் சுத்தமான இரண்டு கண்ணாடி டம்ளர்களில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். நான் கேட்டுக்கொண்டபடி அரசு சாட்சி திரு.சம்பத் என்பவர் வாதி ஆஜர் செய்த மேற்படி ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்த்துவிட்டு மேற்படி கரைசல்களில் தனது கைவிரல்களை தனித்தனியாக நனைத்தார். மேற்படி கரைசல்களில் நிறமாற்றம் எதுவும் ஏற்படவில்லை. எனது அறிவுரையின்படி தலைமைக்காவலர் சிவகுமார் மேற்படி அனைத்து ரூபாய் நோட்டுக்களின் இரு பக்கங்களிலும் பினாப்தலீன் பவுடரை நன்றாக தடவினார். எனது அறிவுரையின்படி அந்த ரூபாய் நோட்டுக்களை அரசு சாட்சி சம்பத் அவர்கள் மீண்டும் எடுத்து எண்ணிப்பார்த்துவிட்டு மேற்படி கரைசல்களையும் மீண்டும் அவரது கைவிரல்களை தனித்தனியாக நனைக்க அக்கரைசல்கள் இரண்டும் இளஞ்சிவப்பு நிறமாக மாற்றம் அடைந்தது. இந்த பரிசோதனையின் முக்கியத்துவத்தை வாதி மற்றும் அரசு சாட்சிகளிடம் விளக்கி கூறினேன். அந்த பவுடர் தடவப்பட்ட ரூ.10000/- பணத்தை வாதி அணிந்திருந்த பேண்ட்டின் பின் பாக்கெட்டில்

வேறு பணமோ, பொருளோ இல்லை என்று உறுதி செய்து கொண்டு அரசு சாட்சி திரு.சம்பத் வைத்தார். மேற்படி பரிசோதனைக்காக தயார் செய்யபட்ட கரைசல்களை கீழே கொட்டி அழிக்கப்பட்டது. மேற்படி பினாப்தலீன் பவுடரை அலுவலகத்திலேயே வைக்கப்பட்டது. சோடியம் கார்பனேட் பவுடர் மற்றும் சில பொருட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அனைவரும் கைகளை நன்கு சோப்பு போட்டு சுத்தம் செய்து கொண்டோம்.

6. வாதி கீழடியில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று எதிரியை சந்தித்து வாதி தனது தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக வேலைகள் செய்யும்படி கேட்க வேண்டும் என்றும் அப்போது எதிரி பணம் கேட்டால் வாதி தனது பேண்ட்டின் பின் பாக்கெட்டில் வைக்கப்பட்டிருக்கும் பவுடர் தடவப்பட்ட ரூ.10000/− ஐ எடுத்துக் கொடுக்க வேண்டும் என்றும் எதிரி அந்த பணத்தை கேட்டு வாங்கிக் கொண்டால் வாதி அந்த மின்வாரியஅலுவலகத்தினை விட்டு வெளியே வந்து அவரது சட்டைப் பாக்கெட்டில் வைத்திருக்கும் சீப்பை எடுத்து மூன்று முறை அவரது தலை முடியை வாரி சைகை செய்ய வேண்டும் என்று வாதிக்கு அறிவுறுத்தினேன். அரசு சாட்சி திரு.கோபால் வாதியுடன் சென்று வாதிக்கும் எதிரிக்கும் இடையே நடக்கும் பேச்சுவார்த்தை மற்றும் செயல்களை கவனிக்க வேண்டும் என்றும்

அறிவுறுத்தினேன். அரசு சாட்சியை யார் என்று கேட்டால் வாதி தன்னுடன் வந்தவர் என்று கூற வேண்டும் என்றும் அறிவுறுத்தினேன். மற்றொரு அரசு சாட்சி திரு.சம்பத் ஆய்வாளராகிய எனது பார்ட்டியுடன் வர வேண்டும் என்றும் தலைமைக்காவலர் திரு.சிவக்குமார் அலுவலகத்திலேயே இருக்கவேண்டும் என்றும் அறிவுரை கூறினேன்.

7. எதிரி தன்னை பார்க்க வருவதற்கு முன்பு போனில் பேசிவிட்டு வரும்படி எதிரி சொன்னதாக வாதி தெரிவித்ததனால் வாதியின் கைபேசி எண். 9344341463 என்ற எண்ணிலிருந்து எதிரியின் கைபேசி எண்.9445853098 என்ற எண்ணிற்கு அன்று பகல் 2.15 மணிக்கு வாதி பேசியபோது பணம் தயாராக இருக்கிறதா என்று எதிரி கேட்டார். வாதியும் பணம் தயாராக இருப்பதாக சொன்னதும் தான் தற்போது மானாமதுரை ADE அலுவலகத்தில் இருப்பதாகவும் மாலை 5.00 மணிக்கு மேல் கீழடி அலுவலகத்தின் அருகில் வந்து தன்னிடம் போனில் பேசிவிட்டு தான் சொல்லும் இடத்திற்கு வரும்படி எதிரி கூறினார்.

8. எனவே, போலிஸ் பார்ட்டி சகிதம் கீழடிக்கு முன்புள்ள சிலைமானுக்கு அரசு வாகனத்தில் செல்வதென முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக அன்று பகல் 1.35 மணி முதல் 2.35 மணிவரை கணினியில் ஒரு ஒப்படைப்பு மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் இரண்டு

அரசு சாட்சிகள், வாதி படித்து பார்த்த பின்பு நானும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரில் இரண்டு பக்கங்களிலும் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்படைப்பு மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.5 ஆக அ.சா.2 மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் அன்று மாலை 3.30 மணிக்கு சிவகங்கை ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து மேற்படி இரண்டு அரசு சாட்சிகள், வாதி மற்றும் காவல்களுடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு பூவந்தி வழியாக அன்று மாலை 4.30 மணிக்கு சிலைமான் வந்தடைந்தோம். பின்னர் ஏற்கனவே இவ்வழக்கின் எதிரி சொன்னபடி மாலை 5.15 மணிக்கு வாதியின் செல்போன் (9344341463) எண்ணிலிருந்து எதிரி பயன்படுத்திய செல்போனுக்கு (9445853098) தொடர்பு கொண்டு பேசியதில் வாதி மதுரையில் தங்கியிருக்கும் லாட்ஜில் இருந்துகொண்டு அதன்பின்னர் சுமார் ஒன்றரை மணிநேரம் கழித்து செல்போனில் பேசும்படி எதிரி சொன்னதாக வாதி தெரிவித்தார்.

9. உடனே நான் இரண்டு அரசு சாட்சிகள், வாதி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் அங்கிருந்து புறப்பட்டு மதுரை– திருப்பரங்குன்றம் (TPK) சாலையில் உள்ள போலிஸ் கிளப் அருகில் அரசு வாகனத்தினை நிறுத்தி அன்று மாலை 6.30 மணிக்கு வாதி, இரண்டு அரசு சாட்கிகள்

மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் மேற்படி TPK சாலையில் உள்ள ஹோட்டல் விஜய் லாட்ஜில் வாதி முருகசாமி தங்கியிருந்த அறை எண்.308 க்கு வந்து எதிரி ஏற்கனவே வாதியிடம் சொன்னதுபோல் அன்று மாலை 6.45 மணிக்கு வாதியின் செல்போனிலிருந்து (9344341463) எதிரியின் செல்போன் எண்ணிற்கு (9445853098) தொடர்பு கொண்டுபேசியதில் தான் மதுரைக்கு வந்துகொண்டிருப்பதாகவும் லாட்ஜ் ரூமில் இருங்க, மதுரைக்கு வந்துவிட்டு பேசுவதாக எதிரி சொன்னதாக வாதி தெரிவித்தார். எதிரியின் போனிற்காக நான் இரண்டு அரசு சாட்சிகள், வாதியுடன் மேற்படி வாதியின் அறையில் காத்திருந்தோம். அன்று இரவு 7.17 மணிக்கு 9443726741 என்ற மொபைல் எண்ணிலிருந்து வாதியின் செல்போனிற்கு ஒரு Missed Call வந்தது. உடனே வாதி மேற்படி மொபைல் எண்ணிற்கு தொடர்புகொண்டு பேசியதில் அதில் பேசிய எதிரி வாதியிடம் தாங்கள் தங்கியுள்ள லாட்ஜின் பெயர் கேட்க வாதியும் விஜய் லாட்ஜில் தங்கியுள்ளதாக தெரிவித்தார்.

10. அன்று இரவு சுமார் 7.37 மணிக்கு மேற்படி 9443726741 என்ற மொபைல் எண்ணிலிருந்து வாதியின் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அதில் எதிரி தான் விஜய் லாட்ஜ் அருகில் வந்துவிட்டதாகவும், வாதி தங்கியுள்ள அறை எண்ணை மீண்டும் கேட்க வாதி 3 வது தளத்தில்

அறை எண்.308 ல் இருப்பதாக சொன்னவுடன் வாதியுடன் அரசு சாட்சி திரு.கோபாலும், மேற்படி வாதி தங்கியிருந்த அறையிலேயே இருந்து கண்காணிக்கும்படி கூறிவிட்டு நான் மற்றொரு அரசு சாட்சி சம்பத்துடன் மேற்படி லாட்ஜில் மூன்றாவது தளத்திலிருந்து மேலே செல்லும் படிக்கட்டில் நின்று கண்காணித்தோம். சுமார் 2 நிமிடத்தில் கீழே படிக்கட்டிலிருந்து மேலே 3 வது தளத்திற்கு வந்த பின்னால் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த எதிரி மேற்படி தளத்தில் மேற்குநோக்கு சென்று அன்று இரவு 7.45 மணிக்கு வடக்கு நோக்கி உள்ளே சென்றார். பிறகு சுமார் 5 நிமிடம் கழித்து இரவு 7.50 மணிக்கு வாதியின் அறைப்பகுதியிலிருந்து எதிரியும் அவருக்கு பின்னால் வாதியும் அரசு சாட்சி திரு.கோபாலும் கிழக்கு நோக்கி வராண்டாவில் வாதி நடந்து வரும்போது வாதி ஏற்கனவே சொல்லியிருந்தபடி தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்து சீப்பை எடுத்து தலையை வாரி சைகை செய்து கொண்டே வந்தார். அப்போது நான் சுமார் 50 அடி தொலைவில் படிக்கட்டு அருகில் இருந்து கவனித்துவிட்டு அரசு சாட்சி திரு.சம்பத்துடன் வாதியை சந்திக்க கேட்டபோது தனக்கு முன்னால் நடந்து சென்ற நபரை காண்பித்து அவர்தான் AE என்றும் தன்னிடம் பணத்தை வாங்கி

எண்ணிப்பார்த்துவிட்டு தனது பாண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டதாக சொன்னார்.

11. வாதியுடன் வந்த சாட்சி திரு.கோபாலிடம் கேட்டபோது அவரும் வாதி சொல்வதுபோல்தான் நடந்தது என்றார். உடனே நான் முன்னே நடந்து சென்ற எதிரியிடம் என்னையும், என்னுடன் வந்தஅரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்ட உடன் எதிரி பதற்றம் அடைந்தார். அவரை ஆசுவாசப்படுத்தி வாதியின் அறைக்கு வரச்சொன்னதன்பேரில் அவரும் வாதியின் அறைக்கு வந்தார். அங்கு அவரை நாற்காலியில் அமரச்செய்துவிட்டு வாதியை மேற்படி அறையின் வெளியே இருக்கும்படி அனுப்பி வைத்தேன். எதிரியிடம் பெயர், பதவி, விபரம் கேட்க அவர் தனது பெயர் C. மீனாட்சி சுந்தரம், JE Grade–I, TNEB, கீழடி பகிர்மானம் என்றும் தெரிவித்தார். உடனே நான் தலைமைக்காவலர் வெங்கடேஷ்குமாரிடம் கரைசல்களை தயார் செய்ய சொன்னதன்பேரில் சுத்தமான இரண்டு கண்ணாடி டம்ளர்களில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். அதில் எதிரியின் வலது மற்றும் இடது கைவிரல்களை தனித்தனியே நனைக்க சொல்ல அவரும் அவ்வாறே செய்தார். அவரது வலது கைவிரல்கள் நனைத்த கரைசல் மற்றும் இடது கைவிரல் நனைத்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாற்றமடைந்தது. அந்த கரைசல்களை

தனித்தனியாக தலா 180 மி.லி கொள்ளளவு இரண்டு சுத்தமான கண்ணாடிபாட்டில்களில் ஊற்றி மூடி, துணியால் சுற்றி, நூலால் கட்டி, லேபிள் தயாரித்து லேபிளில் வழக்கின் விவரம் எழுதி மேற்படி பாட்டில்களில் லேபிள் ஒட்டப்பட்டது. அதில் இரண்டுஅரசு சாட்சிகள், எதிரி மற்றும் நான் ஒப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு பாட்டில்கள் கொண்ட கரைசல் என்னால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதுதான்.

12. எதிரியின் வலது மற்றும் இடது கைவிரல்கள் நனைத்த கரைசல்கள் அடங்கிய பாட்டில்களுக்கு முறையே R மற்றும் L என்று குறியீடு செய்து சீல் வைக்கப்பட்டது. மேற்படி பாட்டில்கள் ஏற்கனவே அ.த.சா.பொ.2, மற்றும் 3 ஆக அ.சா.3 மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் எதிரி மீனாட்சிசுந்தரத்திடம் இவ்வழக்கின் வாதி திரு.முருகசாமி என்பவரிடம் எதுவும் வாங்கினீர்களாக என்று நான் கேட்டபோது எதிரி வாதியிடம் ரூ.10000/- வாங்கியதாக தெரிவித்தார். அந்த பணத்தை ஆஜர் செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அதன்படி அவரும் தனது பேண்டின் பின் பாக்கெட்டிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சி சம்பத்திடமும் இவ்வழக்கில் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட ஒப்படைப்பு மகஜரில் நகலை அரசு

சாட்சிகள் சம்பத் மற்றும் கோபாலிடம் கொடுத்து ரூபாய் நோட்டுகளின் எண்களை ஒப்பிட்டு பார்க்கும்படி கூறினேன். அதன்படி அவரும் ஒப்பிட்டு பார்த்து ஒப்படைப்பு மகஜரில் உள்ள ரூபாய் நோட்டுகளின் எண்களுடன் ஒத்திருப்பதாக தெரிவித்தனர். உடனே நான் எதிரிக்கு மாற்று உடை கொடுத்து அவர் அணிந்திருந்த பேண்ட்டை பெற்று மீண்டும் எனது அறிவுறுத்தலின்படி மற்றொரு சுத்தமான கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். மேற்படிகரைசலில் எதிரியின் பேண்ட்டின் பின் பாக்கெட்டை நனைக்க அக்கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாற்றமடைந்தது. அந்த கரைசலை மற்றொரு சுத்தமான 180 மி.லி கொள்ளளவு கொண்ட கண்ணாடி பாட்டிலில் ஊற்றி மூடி, துணியால் சுற்றி, நூலால் கட்டி, லேபிள் தயாரித்து லேபிளில் வழக்கின் விவரம் எழுதி மேற்படி பாட்டில்களில் லேபிள் ஒட்டப்பட்டது. அதில் இரண்டுஅரசு சாட்சிகள், எதிரி மற்றும் நான் ஒப்பம் செய்தோம். எதிரியின் பேண்ட் பின்பாக்கெட் பகுதி நனைக்கப்பட்ட கரைசல் ஊற்றப்பட்டு சீல் இடப்பட்ட அந்த பாட்டிலிற்கு P என்று குறியீடு செய்தேன். அந்த கரைசல் அடங்கிய பாட்டில் ஏற்கனவே அ.த.சா.பொ.4 ஆக அ.சா.3 மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

13. அதன் பின்னர் இவ்வழக்கின் வாதி முருகசாமியிடம் எதற்காக பணம் வாங்கினீர்கள் என்று எதிரியிடம் கேட்டேன். அதற்கு JE, மீனாட்சிசுந்தரம் கான்ட்டிராக்ட் லேபருக்கு கூலி கொடுப்பதற்காக பணம் வாங்கியதாக தெரிவித்தார். வாதி முருகசாமிக்கு மின் இணைப்பு கொடுக்கும் வேலையின் தற்போது நிலை குறித்து எதிரியிடம் கேட்டேன். அதற்கு அவர் விரிவாக்க வேலை முடித்துள்ளதாகவும் அதற்கிடையே ஒரு நபர் மேற்படி வேலையை நிறுத்தச் சொல்லி ஆட்சேபனை தெரிவித்து மனு கொடுத்துள்ளதாகவும் அந்த தகவல் வாதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிரி தெரிவித்தார். உடனே நான் அந்த அறையின் வெளியே இருந்த இவ்வழக்கின் வாதி முருகசாமியை உள்ளே அழைத்து கீழடி AE அலுவலகத்திலிருந்து தங்களுக்கு தபால் எதுவும் வந்துள்ளதா என்று கேட்டேன். அதற்கு அவர் தனக்கு தபால் எதுவும் வரவில்லை என்று தெரிவித்தார். மீண்டும் அவரை அறைக்கு வெளியே இருக்கச்சொல்லிவிட்டு இவ்வழக்கின் வாதி திரு.முருகசாமி என்பவரிடம் மின்இணைப்பு கொடுப்பதற்காக ரூ.10000/− லஞ்சமாக கேட்டு பெற்றதற்காக மேற்படி கீழடி பகிர்மான TNEB, JE, திரு.C.மீனாட்சிசுந்தரம் என்பவரை அன்று 09.11.2011 இரவு 10.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன். கைதின் விபரம் எதிரியின் குடும்பத்தாருக்கு

தெரிவிக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் Arrest Form–ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது என்னால் தயார் செய்யப்பட்டதுதான். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.7 ஆக அ.சா.3 மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. மேலும் மேற்படி விபரம் மின்வாரிய திருப்புவனம் ADE மற்றும் மானாமதுரை பொறுப்பு செயற்பொறியாளர் அவர்களுக்கும் தகவல் தெரிவித்து மதுரைக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அதுவரை வருவதாக சொல்லிக்கொண்டிருந்தவர்கள் யாரும் அந்த இடத்திற்கு வரவில்லை. வழக்கின் நிமித்தமாக 1) பொறி வைப்பிற்கு பயன்படுத்திய ஏற்கனவே சொன்ன ரூ.1000/– நோட்டுகள் எட்டும், ரூ.500/– நோட்டுகள் நான்கும் ஆக மொத்தம் ரூ.10000/–, 2) சீல் வைக்கப்பட்ட எதிரியின் வலது மற்றும் இடது கை விரல்கள் மற்றும் எதிரியின் பேண்ட் பின் பாக்கெட் நனைத்து சோதனை செய்யப்பட்ட கரைசல்கள் அடங்கிய L,R,P என குறியீடு செய்யப்பட்ட பாட்டில்கள் மூன்று, 3) எதிரி அணிந்திருந்த மற்றும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட Tailor Mark இல்லாத Siyorams துணியிலான பேண்ட் ஒன்று, 4) எதிரியின் கைப்பையில் இருந்த திருமதி.சின்னபொன்னம்மாள் என்பவரின் விரிவாக்கபணி சம்பந்தமான கோப்பின் நகல்கள் மொத்தம் 15 தாள்கள்

கொண்டது, 5) இலந்தகுளம் ஊராட்சி OHT மின் இணைப்பு கொடுப்பதற்கான கோப்பின் நகல் 10 தாள்கள் கொண்டது. 6) M.கண்ணன், இலந்தகுளம் என்பவருக்கு விவசாய மின் இணைப்பு கேட்டு கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் மொத்தம் 12 தாள்கள் கொண்டது. 7) Jasmine Towers Pvt. Ltd., தொடர்பான கோப்பு மொததம் 20 தாள்கள் கொண்டது மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் JE, மீனாட்சிசுந்தரத்தை சோதனையிட அவரது சட்டைப் பாக்கெட்டில் ரூ.310/– காணப்பட்டது. மேற்படி பணம் தனது சொந்த கைச்செலவிற்கு வைத்திருப்பதாக எதிரி தெரிவித்ததனால் மேற்படி பணம் எதிரியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

15. மேலும் எதிரியிடம் GTE 2152 i என்ற மாடல் Samsung Dual SIM வகை மொபைல் போன் காணப்பட்டது. அதில் 9445853098 மற்றும் 9443726741 என்ற இரண்டு மொபைல் எண் சிம் உள்ளது என்று எதிரி தெரிவித்தார். மேற்படி மொபைல் போன் எதிரியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி சம்பவ இடம் பற்றி பார்வை மகஜர் அரசு சாட்சிகள் இருவர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் 09.11.2011ம் தேதி இரவு 8.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் இரண்டு அரசு

சாட்சிகள், நானும் மற்றும் லாட்ஜின் மேலாளர் ஆகியோரும் கையொப்பம் செய்தோம். லாட்ஜின் மேலாளர் அனைத்து நடவடிக்கைகளும் முடிந்த பிறகு அங்கு வந்தார். மகஜரின் கடைசி பக்கத்தில் லாட்ஜின் மேலாளரிடம் கையொப்பம் பெறப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ–12 ஆக அ.சா.3 மூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரிக்கு 1 முதல் 10 பக்கங்கள் வரை உள்ள மகஜரில் நகல் ஒன்று வழங்கப்பட்டு மகஜரின் 10 வது தாளின் பின் பக்கத்தில் கையொப்பம் பெறப்பட்டது.

16. அதன்பிறகு ஒரு மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மதுரையில் உள்ள எதிரியின் வீட்டை சோதனையிட வேண்டி **முன் தகவல் கடிதம்** சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த கடிதம் என்னால் தயார் செய்யப்பட்டதுதான். அந்த கடிதம் **அ.த.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரசு சாட்சிகள் முன்னிலையில் மதுரை வில்லாபுரம் பகுதியில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பிளாட் எண்.4895–ல் உள்ள எதிரி மீனாட்சிசுந்தரம் வீட்டினை அன்று இரவு

11.30 மணி முதல் 11.45 வரை இரு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அந்த சோதனையில் எந்த ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அந்த சோதனை ஜாபிதாவின் நகல் எதிரிக்கு வழங்கி கையொப்பம் பெறப்பட்டது. அந்த சோதனை ஜாபிதா ஏற்கனவே அ.த.சா.ஆ.13 ஆக அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

17. அதன் பின்னர் மதுரையிலிருந்து புறப்பட்டு கீழடி மின்வாரிய அலுவலகத்திற்கு வந்தோம். மேற்படி அலுவலகத்தில் கள உதவியாளர் திரு.வாழவந்தான் என்பவர் ஆஜரில் இருந்தார். இவ்வழக்கின் விசாரணை நிமித்தமாக மேற்படி கீழடி உதவி மின்பொறியாளர் அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள 1) அலுவலக வருகைபதிவேடு–2011, 2) மேற்படி அலுவலக விண்ணப்ப பதிவேடு ஒன்று, 3) மேற்படி அலுவலக Proposal Register ஒன்று, 4) மேற்படி அலுவலக Job Allocation Register, 5) இவ்வழக்கின் வாதி முருகசாமி மின்இணைப்பு கோரி கொடுத்திருந்த விண்ணப்பம் மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் அடங்கிய கோப்பு 174 பக்கங்கள் கொண்டது, 6) வாதிமுருகசாமிக்கு மின்இணைப்பிற்கான தளவாடப் பொருட்கள் கோரிய வேண்டுகோள் மற்றும் மதிப்பீடு அட்டை மொத்தம் 7 தாள்கள் கொண்டது. 7) வாதி முருகசாமிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக மின் கம்பங்கள் நடுவதற்கு ஆட்சேபனைதெரிவித்த

திரு.குதாபாக்ஷ் என்பவரின் மனு மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய கோப்பு ஆகிய ஆவணங்கள் மேற்படி இரண்டு அரசுசாட்சிகள், மேற்படி கள உதவியாளர் வாழவந்தான் முன்னிலையில் 10.11.2011 ம்தேதி அதிகாலை 1.00 முதல் 1.45 மணி வரை அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. அதில் இரண்டு அரசு சாட்சிகள், கள உதவியாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜர் நான் தயார் செய்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **அத்தாட்சி மகஜர் அ.த.சா.ஆ–29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சியின் நகல் ஒன்று களஉதவியாளர் திரு.வாழவந்தானுக்கு வழங்கி ஒப்பம் பெறப்பட்டது.

18. அதன் பின்னர் அங்கிருந்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் ஆவணங்களுடன் 10.11.2011–ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு சிவகங்கை ஊ.த.க பிரிவு அலுவலகம் வந்தடைந்தோம். பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து அலுவலகத்தில் அவரை காவலில் வைத்தோம். பின்னர் காலை 7.00 மணிக்கு எதிரி மீனாட்சி சுந்தரத்தை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு ஆஜர்படுத்தினோம். கைப்பற்றப்பட்ட கரைசல்கள் மற்றும் ரூபாய் நோட்டுக்கள் படிவம்–91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். அந்த

**படிவம்–91 அ.த.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படுவது என்னால் தயார் செய்யப்பட்ட Arrest Report தான். அந்த **Arrest Report அ.த.சா.ஆ–31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேல்விசாரணைக்காக இவ்வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.பாண்டியராஜன் அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தின் நகல் நான் கையில் வைத்துள்ள கோப்பில் உள்ளது என்றால் கோப்பில் நிறைய ஆவணங்கள் உள்ளன, அதில் எனது வாக்குமூலமும் உள்ளது. இந்த வழக்கில் புகார்தாரர் அ.சா.2 முருகசாமி எதிரி மீது கொடுக்கப்பட்ட புகார் பெற்றது முதல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது, பொறிவைப்பு நடவடிக்கை நடத்தியது என அனைத்தையும் நான் நேரடியாக செய்தேன் என்றால் சரிதான்.

2. நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியம் முழுவதும் எனது நினைவிலிருந்து சொல்லாமலும், நான் தயார் செய்ததாக சொல்லும் ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும் புலன் விசாரணை அதிகாரி

என்னிடம் பெற்றதாக சொல்லும் வாக்குமூலத்தின் நகலை வைத்து வார்த்தை வரி தவறாமல் அப்படியே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரியின் பணி என்பது முருகசாமியின் தொழிற்சாலையில் மின் கம்பங்கள் ஊன்றி முடிப்பதுதான் என்றால் சரியல்ல. தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கொடுப்பது Superintendent Engineer அல்லது Deputy Superintendent Engineer அவர்களின் பணி என்றால் சரிதான். அப்படி ஏதாவது Approval ஐ மேற்படி அதிகாரிகள் கொடுத்து அதை எதிரி செயல்படுத்தாமல் இருந்திருக்கிறாரா என்றால் மின் இணைப்பு தொடர்பான மின் கம்பங்கள் மட்டும் ஊன்றப்பட்டு தொடர் நடவடிக்கைகளை தொடராமல் எதிரி நிறுத்தி வைத்துள்ளார்.

3. நான் பொறிவைப்பு நடவடிக்கையின் போது எதிரியை விசாரித்ததாகவும், அவ்வாறு விசாரித்தபோது முருகசாமியின் Service Connection கொடுக்கும் வேலையை தற்போதைய நிலை குறித்து எதிரியை நான் கேட்டேன் என்றும் அதற்கு விரிவாக்க வேலை முடித்துள்ளதாக எதிரி என்னிடம் தெரிவித்தாரா என்றால் சரிதான். அதற்கிடையில் ஒரு நபர் மேற்படி வேலையை நிறுத்தச்சொல்லி ஆட்சேபனை தெரிவித்திருந்ததாக என்னிடம் கூறினாரா என்றால் சரிதான். அது சம்பந்தமாக அப்போது முருகசாமியை அழைத்து கேட்டபோது அவர்

ஆட்சேபனை மனு எதுவும் வரவில்லை என்று சொன்னாரா என்றால் ஆட்சேபனை மனுவை முருகசாமி பெற்றாரா என்பது குறித்து எனக்கு தெரியாது, ஆனால் எதிரி அந்த ஆட்சேபனை தொடர்பாக முருகசாமிக்கு தகவல் தெரிவித்ததாக கூறினார், அந்த கடிதம் தான் வரவில்லை என வாதி முருகசாமி கூறினார். ஆனால் அது சம்பந்தமாக நான் எதிரி பணியாற்றிய கீழடி மின் அலுவலகத்திற்கு சென்று ஆவணங்களை கைப்பற்றியதாக சொல்லும் வகையில் அந்த கைப்பற்றிய ஆவணங்களில் திரு.குதாபாக்ஷ் என்பவர் ஆட்சேபனை மனு கொடுத்ததாகவும் அதை அ.சா.2 முருகசாமிக்கு எதிரி அனுப்பி முருகசாமி பெற்றுகொண்டதற்கு ஆதரவாக ஒப்புதல் அட்டை அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருந்ததை நான் கைப்பற்றினேனா என்றால் கோப்பை கைப்பற்றினேன். சாட்சி அந்த கோப்பை பரிசீலனை செய்து விட்டு முருகசாமி ஒப்பம் செய்து வாங்கியதாக அதில் காணப்படவில்லை என்று கூறினார்.

4. ஒரு நபருக்கு மின் கம்பம் ஊன்றி மின் இணைப்பு கொடுக்கும்போது யாரேனும் ஆட்சேபனைதெரிவித்தார் அதை நிவர்த்தி செய்து கொடுக்கும் பொறுப்பு யார் மின் இணைப்பு கோரிக்கை வைத்திருக்கிறாரோ அவர் தான் அதை தீர்த்து வைக்க வேண்டும் என்றால்

சரியல்ல. முருகசாமி என்னிடம் வரும்போது எழுத்துமூலமான புகார் எதுவும் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல, அவருடன் வேறு யாரேனும் வந்தார்களா என்றால் இல்லை, அவர் மட்டும்தான் வந்தார். புகாரில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர் முருகசாமியுடன் எனது அலுவலகத்திற்கு வரவில்லை. புகார் எழுத்தப்பட்ட காகிதம் எங்கள் அலுவலகத்திற்கு அரசால் வழங்கப்பட்ட காகிதம் என்றால் சரியல்ல. அ.சா.2 முருகசாமி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு வரும் போது எந்த எழுத்து மூலமான புகாரையும் கொண்டுவரவில்லை என்றும் அ.சா.2 முருகசாமி நான் சொல்ல சொல்ல ஒரு புகாரை எழுதி அதில் அவரது கையொப்பம் என்னால் பெறப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆகியது என்றால் சுமார் ஒரு அரைமணிநேரம் ஆகியது. அ.த.சா.ஆ-25 முதல் தகவல் அறிக்கையின் முதல் பக்கம் கையால் எழுதப்பட்டும் பின் பக்கம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் பக்கத்தில் உள்ள எழுத்துக்கள் யாருடையது என்றால் என்னுடையது. ஏன் ஒரு பக்கத்தில் கையால் எழுதப்பட்டும், மறுபக்கம் தட்டச்சும் செய்யப்பட்டும் உள்ளது என்றால் முன் பக்கத்தில் அந்தந்த Coloumn-ல் பிரிண்ட் சரியாக விழாது என்ற காரணத்தால் கையால் எழுதப்பட்டது. பின் பக்கம் Plain sheet ஆக

இருந்ததால், அதில் கணினியில் தட்டச்சு செய்து கையொப்பம் பெறப்பட்டது. நான் சொல்லும் இந்த விளக்கம் உண்மையானது அல்ல என்றால் சரியல்ல.

5. முருகசாமி மற்றும் எதிரியை நான் இந்த வழக்கிற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. முருகசாமியின் சொந்த ஊர் திருப்பூர் என்றால் சரிதான். அது ஊ.த.க பிரிவு சிவகங்கையிலிருந்து எவ்வளவு கிலோ மீட்டர்கள் என்றால் சுமார் 200 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும். ஊ.த.க பிரிவு சிவகங்கையிலிருந்து எதிரி அப்போது பணியாற்றிய கீழடி மின் அலுவலகதிற்கு எவ்வளவு கிலோ மீட்டர் என்றார் சுமார் 50 கிலோ மீட்டர்கள் இருக்கும். எதிரி குடியிருந்தது மதுரை, வில்லாபுரத்தில்தான் என்றால் சரிதான். மதுரை, வில்லாபுரத்திற்கும், சிவகங்கை, ஊ.த.கபிரிவு காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 60 கிலோ மீட்டர்கள் இருக்கும். நான் இரண்டு மணிநேரத்திற்குள் எதிரியின் நடவடிக்கைகள் குறித்தும், புகார்தாரரின் நம்பகத்தன்மை குறித்தும் விசாரித்திருக்க இயலாது என்றும் மேலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அரசு சாட்சிகள் கோபால் மற்றும் சம்பத் ஆகியோர்களை இந்த வழக்கின் சாட்சிகளாக இருக்க வேண்டும் என்று நான் சொன்னபோது அவர்கள் அதற்கு

விருப்பமில்லை என்று மறுத்தார்களா என்றால் சாட்சியாக இருக்க சம்மதம்தான் தெரிவித்தார்கள்.

6. நான் சொல்வதுபோல் முருகசாமிக்கு அரசு சாட்சிகளையோ, அரசு சாட்சிகளுக்கு முருகசாமியை நான் பரஸ்பர அறிமுகம் செய்து வைக்கவில்லை என்றால் சரியல்ல. முருகசாமியின் அசல் புகாரையோ, நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலையோ அரசு சாட்சிகளிடம் கொடுத்து படித்து பார்க்க கூறினேனா என்றால் அவற்றின் நகல்களைத்தான் கொடுத்து படித்துப்பார்க்கச் சொன்னேன். முருகசாமியின் நகல் புகாரையோ, நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் நகலையோ நான் அரசு சாட்சிகளுக்கு கொடுத்து படித்துப்பார்க்கச் சொல்லவில்லை என்றும் அவர்கள் அதை படித்துப்பார்க்கவில்லை என்றும் அது குறித்து முருகசாமியிடம் உண்மைதானா என்று கேட்கவில்லை என்றும் முருகசாமி அவை அனைத்தும் உண்மைதான் என்று சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் எங்கள் அலுவலகத்தில் வைத்து சோடியம் கார்பனேட் சோதனை செய்து காண்பிக்கப்படவில்லை என்றாலும், அதன் முக்கியத்துவத்தை வாதிக்கும் அரசு சாட்சிகளுக்கும் விளக்கி கூறவில்லை என்றால் சரியல்ல.

7. லஞ்சப்பணம் ரூ.10000/−ஐ அரசு சாட்சி சம்பத் அவர்கள் முருகசாமியின் பாண்ட் பின் பாக்கெட்டில் வைக்கும் சமயத்தில் முருகசாமியின் உடையில் வேறு எந்த பொருட்களும் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்டேனா என்றால் பாண்ட் பாக்கெட்டில் பணம் வைப்பதற்கு முன்பாக அதில் வேறு எந்த பொருட்களும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். அன்று பகல் 2.15 மணிக்கு முருகசாமி எதிரியிடம் Open speaker ல் வைத்து பேசவும் இல்லை, அப்போது பணம் தயாராக இருக்கிறதா என்று எதிரி கேட்கவும் இல்லை, அதற்கு வாதி தான் பணத்தை தயார்செய்து வைத்திருப்பதாக கூறவும் இல்லை என்றால் சரியல்ல. அங்கு வைத்து ஒப்படைப்பு மகஜர் என்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அப்போது மானாமதுரை ADE அலுவலகத்தில் எதிரி இருப்பதாக முருகசாமிதான் தெரிவித்தார் என்றால் ஆமாம். சிவகங்கையிலிருந்து மானாமதுரை ADE அலுவலகத்தின் தெற்கே சுமார் 15 கிலோ மீட்டர்கள் தூரம் இருக்கும் என்றால் சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எதிரி மானாமதுரை ADE அலுவலகத்தில் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டவுடன் அங்கு புறப்பட்டு சென்றேனா என்றால் எதிரி பேசும்போதே கீழடிக்குதான் வாதி முருகசாமியை வரச்சொன்னார், அதனால் நாங்கள் மானாமதுரைக்கு செல்லவில்லை.

மானாமதுரையிலிருந்து மேற்கு திசையில் கீழடி 35 கிலோமீட்டர்தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிரி பணியாற்றிய கீழடி மின் பொறியாளர் அலுவலகம் கிழமேலாக செல்லும் இராமேஸ்வரம்–மதுரை தேசிய நெடுஞ்சாலைக்கு தெற்கே எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் சுமார் ஒரு 5 கிலோ மீட்டர் இருக்கும். கீழடியிலிருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு வடக்கே சிலைமான் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்றால் சரியான தூரம் தெரியவில்லை.

8. நான் ஊ.த.க பிரிவு சிவகங்கையிலிருந்து கீழடிக்கு பூவந்தி கிராமம் வழியாக இராமேஸ்வரம்–மதுரை தேசிய நெடுஞ்சாலை வழியாக மேற்கு நோக்கி செல்ல வேண்டும் என்றால் சரிதான். அன்று சிலைமானில் எங்கள் அரசு வாகனத்தை எந்த இடத்தில் நிறுத்தினோம் என்றால் நெடுஞ்சாலை ஓரத்தில்தான் நிறுத்தினோம், சிலைமான் ஊருக்குள் செல்லவில்லை. எவ்வளவு நேரத்தில், எந்த இடத்தில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம் என்றால் சுமார் முக்கால் மணிநேரம் சிலைமான் தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்தோம். முக்கால் மணி நேரமாக தேசிய நெடுஞ்சாலையில் நின்ற நாங்கள் தெற்கோ இருந்த கீழடியில் இருந்த எதிரியின் அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியாற்றி கொண்டிருந்த சிப்பந்திகளிடம் எதிரி மானாமதுரை

சென்றிருப்பது உண்மைதானா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, புகார்தாரர் கூறியதால் அது பற்றி வேறு யாரிடமும் விசாரணை செய்யவில்லை. எதிரி மதுரைக்கு செல்வதற்கு முன்பாகவே போலிஸ் பார்ட்டியினர் மதுரைக்கு சென்று TPK ரோட்டின் அருகில் உள்ள போலிஸ் கிளப்பின் அருகில் நின்று கொண்டிருந்தேன் என்றாலும் TPK ரோடு என்பது தென்வடலாக செல்லக்கூடியது என்றால் சரிதான். அந்த ரோட்டின் மேற்கு பகுதியில் கிழக்கு பார்த்து விஜய் லாட்ஜ் இருந்தது என்றால் சரிதான்.

9. TPK ரோட்டிற்கும் அந்த லாட்ஜிற்கும் 200 மீட்டர் தூரத்தில் மேற்கே பெரியார் பேருந்து நிலையம் அமைந்துள்ளது என்றால் அது குறித்து நான் பார்வையிடவில்லை, அதனால் தெரியாது. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து TPK ரோடு வழியாக விஜய் ஹோட்டலை தாண்டி தெற்கே உள்ள எதிரியின் வில்லாபுரம் வீட்டிலிருந்து செல்ல வேண்டும் என்றால் இரவு நேரம் என்பதால் எனக்கு சரியாக திசைகள் தெரியவில்லை. TPK ரோட்டில் விஜய் லாட்ஜ்க்கு அருகில் இரண்டு பக்கமும் கடைகள், லாட்ஜ்கள் மற்றும் வணிக வளாகங்கள் இருப்பதோடு அது மிகுந்த ஜனநடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். நான் அங்கு சென்று போலிஸ் கிளப்பிற்கு பக்கம் நின்றதோ, சிலைமானுக்கு

அருகே நின்ற போதோ அங்கிருந்த பொதுமக்களுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, பொறிவைப்பு நடவடிக்கை யாரும் தெரியாமல் நடத்தப்பட வேண்டும். எதிரி வருவதற்கு முன்பாகவே நானும், எங்கள் போலிசார் பார்ட்டியும் முருகசாமியும் விஜய் லாட்ஜிற்கு சென்றோமா என்றால் சரிதான். கிழக்கு பார்த்த விஜய் லாட்ஜில் உள்ளே நுழைந்தவுடன் ஒரு பெரிய ஹால் உள்ளது என்றால் ஹால் உள்ளதாக பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளேன், ஆனால் அதன் அளவு தெரியவில்லை. ஹோட்டலின் உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கமாக தெற்கு பக்கத்தில் Receptionist இருக்கக்கூடிய பகுதியும் அதற்கு வடக்கே பார்வையாளர்கள் இருக்கக்கூடிய சோபா செட் இருக்கைகளும் உள்ளன என்றால் மகஜரில் குறிப்பிட்டு கூறாததால் அது குறித்த விபரங்கள் அது பற்றி தெரியவில்லை. Receptionist இருக்கக்கூடிய பகுதிக்கு மேற்கே Lift–ம் அதற்கு அடுத்து படிக்கட்டுகளும் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

10. ஒரு அந்த லாட்ஜ்க்கு உள்ளே நுழைந்து இந்த Receptionist பகுதியைத்தாண்டித்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். Receptionist இருக்கையிலும், அந்தஅறையிலும் நான்கு மாடிகளிலுமே பல கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் அந்த சமயத்தில் கேமரா பொருத்தப்பட்டிருந்ததா இல்லையா என்பது தற்சமயம் எனக்கு

ஞாபகமில்லை. அந்த காலக்கட்டத்திலேயே அந்த லாட்ஜின் அனைத்து தளங்களிலும் பல கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது என்றாலும் அதை நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்காக Receptionist அமர்ந்திருக்கும் இருக்கைக்கு எதிரே உள்ள பார்வையாளர் சோபாவில் அமர்ந்திருந்தேனா என்றால் அமரவில்லை. 3 வது மாடியின் நடுப்பகுதியிலும் அதற்கு தெற்கே மற்றும் வடக்கே அறைகள் உள்ளன என்றால் சரிதான். அந்த மாடிப்படியிலிருந்து எந்த பக்கம் அறை எண்.308 உள்ளது என்றால் மாடிப்படியிலிருந்து மேற்கு பக்கத்தில் நடைபாதைக்கும் வடக்கே அறை எண்.308 உள்ளது. அந்த மாடிப்படியிலிருந்து அறை எண்.308 என்பது எவ்வளவு தூரம் என்றால் சுமார் 60 அடி இருக்கும்.

11. எதிரி அந்த லாட்ஜ்க்கு வருவதற்கு முன்பாக நாங்கள் அங்கு சென்று விட்டோம் என்றால் சரிதான். நாங்கள் சென்றதற்கு பிறகு எவ்வளவு நேரம் கழித்து எதிரி அங்கு வந்தார் என்றால் சுமார் ஒரு கால் மணிநேரத்தில் வந்திருப்பார். அவ்வாறு வந்த அவர் அறை எண்.308–ல் எவ்வளவு நேரம் இருந்திருப்பார் என்றால் சுமார் ஐந்து நிமிடம் இருந்திருப்பார். அவ்வாறு எதிரி உள்ளே நுழையும்போது அறை எண்.308–ல் முருகசாமியும், அரசு சாட்சி கோபாலும் அந்த அறையில்

இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அந்த அறையிலிருந்து 3 வது தளத்தின் மாடிப்படி எவ்வளவு தூரம் என்றால் சுமார் 60 அடி இருக்கும். எதிரி வெளியே வரும்போது நாங்கள் எந்த இடத்திலிருந்து பார்த்தோம் என்றால் 3 வது தளத்திலிருந்து மேல்தளத்திற்கு செல்லும் படிக்கட்டு அருகில் நின்று பார்த்தோம். அப்போது முதலில் எதிரியும், அதற்கு பின்னால் முருகசாமியும், கோபாலும் எவ்வளவு தூரம் பின்னால் வந்தார்கள் என்றால் சுமார் ஒரு மீட்டர் தூரம் பின் புறத்தில் வந்தார்கள். அந்த அறையிலிருந்து எவ்வளவு தூரம் தெற்கே எதிரி வந்தபோது அ.சா.2 முருகசாமி சைகை காண்பித்தார் என்றால் எதிரி கிழக்கு நோக்கி செல்லும்போது அறையிலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் சைகை காண்பித்தார். அப்படி முருகசாமி சைகை காண்பித்தபோது எதிரி நான் நின்று கொண்டிருந்த இடத்தைத்தாண்டி சென்றுவிட்டாரா என்றால் இல்லை. முருகசாமி சைகை காண்பித்தவுடன் நான் முருகசாமியிடமோ, கோபாலையோ எவ்வளவு நேரம் விசாரணை செய்தேன் என்றால் சுமார் மூன்று நிமிடம் விசாரணை செய்தேன். அவ்வாறு விசாரணை செய்து கொண்டிருக்கும்போது எதிரி என்னை தாண்டி சென்றுவிட்டாரா என்றால் எதிரிக்கு பின்பு வந்த முருகசாமி சைகை காட்டியவுடன் நாங்கள் எதிரியை

நோக்கி சென்றோம், எதிரி அதற்கு முன்பாக எங்களை கடந்துதான் சென்றார்.

12. முருகசாமியிடமோ, கோபாலிடமோ நாங்கள் விசாரித்து முடிக்கும்போது எதிரி அந்த மாடிப்படியிலிருந்து கீழே இறங்கி விட்டாரா என்றால் இல்லை, அதற்குள் அங்கு சென்று எதிரியிடம் என்னை நான் அறிமுகப்படுத்தி கொண்டேன். எதிரி அங்கு வரும்போது கையில் வேறு ஏதேனும் ஆவணங்கள் வைத்திருந்தாரா என்றால் இல்லை. எதிரியும் அ.சா.2 முருகசாமியும் அறை எண்.308 ல் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது முருகசாமி எதிரியிடம் லஞ்சப்பணம் கேட்டுப்பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், நேரடியாக தெரியாது, அரசு சாட்சியும், வாதி முருகசாமியும் சொல்லிதான் தெரியும், என்னை எதிரியிடம் அறிமுகம் செய்து கொண்ட பிறகு எதிரி அந்த இடத்திலிருந்து ஓட முயற்சி செய்தாரா என்றால் பதற்றமாக காணப்பட்டார், ஓட முயற்சி செய்யவில்லை, அவரிடமிருந்த பணத்தை கீழேபோட முயற்சி செய்தாரா என்றால் இல்லை. வாதி மற்றும் அரசு சாட்சியும் நான் விசாரணை செய்தபோது என்னிடம் எந்த அறைக்கு முன்பாக வைத்து விசாரித்தேன் என்றால் அறை எண்.307 மற்றும் 308 க்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து விசாரித்தேன்.

13. நான் முருகசாமியிடமும், அரசுசாட்சியிடமும் விசாரணை செய்து விட்டு எதிரியிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டபோதுஅவரிடம் இருந்த பணத்தை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை, அவரை அறைக்கு அழைத்து சென்று விசாரணை செய்த பின்னர்தான் லஞ்சப்பணத்தைக் கைப்பற்றினேன். அந்த அறைகள் தென்வடலாக இருந்தது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.27 மாதிரி வரைபடத்தில் அறைகள் கிழமேலாக இருந்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Vigilance Manual படி சம்பவ இடம் குறித்து வரைபடம் வரையும்போது அந்த எதிரி எந்த இடத்தில் இருந்தார் என்பதை லஞ்சம் கொடுக்க வந்தவர் எந்தஇடத்தில் இருந்தார் என்ற தூரத்தையும் எதிரிக்கும் அவருக்குமிடையே எவ்வளவு தூரம்இருந்தது என்ற விபரத்தையும் பொறிவைப்பு குழுவினர் எதிரிக்கு எவ்வளவு தூரத்தில் இருந்தோம் என்பதையும் குறிக்க வேண்டும் என்றால் சரிதான். Vigilance Manual படி எதிரி இருந்த இடத்தையோ, முருகசாமி இருந்த இடத்தையோ நான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. Vigilance Manual படி அரசு சாட்சிகள் இருவரிடமும் தான் தயார் செய்தவரைபடத்தில் அந்த இடத்தில் அரசு சாட்சிகளிடம் கையொப்பம் பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அவ்வாறு அரசு சாட்சிகளிடம் வரைபடத்தில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை.

14. மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–27 உண்மை நிலையை விவரிக்கும் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி விஜய் லாட்ஜ்க்கு வரவில்லை என்றாலும் அறை எண்.308–க்கு வரவில்லை என்றாலும் அங்கு வைத்து அ.சா.2 முருகசாமியிடம் எந்த லஞ்சப்பணமும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த அறையை விட்டு அவர் வெளியே வந்து என்னை பார்த்து சைகை செய்யவில்லை என்றும் நான் எதிரியை அந்த அறைக்கு அழைத்து செல்லவில்லை என்றும் அங்குவைத்து நான் கூறியபடி சோடியம் கார்பனேட் பரிசோதனை செய்யப்படவில்லை என்றும் அங்கு வைத்து நான் சொன்னபடி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி எப்போதும்போல் கீழடி அலுவலகப்பணிகளை முடித்து அவர் குடியிருக்கும் வில்லாபுரம் வீட்டிற்கு செல்வதற்கு பேருந்து மூலமாக பெரியார் பேருந்து நிலையம் வந்து இறங்கி அங்கிருந்து TPK ரோடு வழியாக விஜய் லாட்ஜ் தாண்டி வில்லாபுரம் வீட்டிற்கு செல்வது வழக்கம் என்றும் அவ்வாறு சம்பவத்தன்று எதிரி கீழடி அலுவலகத்திற்கு புறப்பட்டு பேருந்தில் ஏறி பெரியார் பேருந்து நிலையம் வந்து இறங்கி TPK ரோடு

வழியாக ஹோட்டல் விஜய் லாட்ஜை தாண்டி செல்லும் போது அவருக்கு பின்னால் அ.சா.2 முருகசாமி மட்டும் அவருடன் பேச்சு கொடுப்பதுபோல் பேசிக்கொண்டுசென்று மதுரையில் தனக்கு யாரையும் தெரியாது என்றும் எதிரி துணைக்கு வந்தால் தன் தொழிற்சாலைக்குள்ள உபகரணங்களை வாங்குவதற்கு உதவி செய்யும்படி கேட்டு அந்த சாமான்களின் பட்டியலை கையில் கொண்டு வந்து முன்னால் சென்று கொண்டிருந்த எதிரி பின்னால் அவர் பேண்ட் பாக்கெட்டில் அந்த பட்டியல் தாளையும், பணத்தையும் எதிரிக்கு தெரியாமல் அவரது பின் பாக்கெட்டில் என்னுடைய ஆலோசானையின்படி திணித்தார் என்றும் அதை சற்றும் எதிர் பார்க்காத எதிரி என்ன சார் என்று முருகசாமியை பார்த்துகேட்டு அவர் திணித்த பணத்தை எடுக்க முயற்சித்தபோது நானும் என்னுடைய குழுவினரும் எதிரியை அந்த இடத்தில் ரோட்டிலேயே பிடித்து அந்த ரோட்டில் அதிக கூட்டம் இருந்ததால் நேரடியாக எங்கள் அலுவலகத்திற்கு எதிரியை கூட்டி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல.

15. எதிரி முருகசாமி தொழிற்சாலை சம்பந்தமாக செய்யவேண்டிய மின் இணைப்பு பணிகளை செய்து முடித்து விட்டார் என்றும் ஆகவே எதிரி முருகசாமியிடம் பணம் கேட்க வேண்டிய சூழ்நிலை அன்றைய தினம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நானோ, எங்களது போலிஸ் பார்ட்டியினரோ விஜய் லாட்ஜ்க்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியிடம் எதற்காக லஞ்சப்பணம் வாங்கினீர்கள் என்று கேட்கவும் இல்லை, அவர் ஒப்பந்த கூலியாளர்களுக்கு கொடுக்க வாங்கினேன் என்று சொல்லவும் இல்லை என்றால் சரியல்ல. Vigilance Manual Rule-47 படி பொறிவைப்பு நடவடிக்கை முடிந்தவுடன் எதிரியை விசாரித்து வாக்குமூலம் பெற வேண்டும் என்றால் சரிதான். தனியாக வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை. நான் எதிரி கூறிய சங்கதிகளை மகஜரில் பதிவு செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் பொறிவைப்பு நடவடிக்கையின் போது மகஜரில் பதிவு செய்தது போதுமானது கிடையாது என்றாலும் எதிரியிடம் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விஜய் லாட்ஜ்லிருந்து எதிரி இருந்த வில்லாபுரம் குடியிருப்பு எவ்வளவு தூரம், எந்த திசையில் உள்ளது என்றால் எவ்வளவு தூரம், எந்த திசையில் என்று நினைவில்லை ஆனால் 15 நிமிடங்களில் சென்று விடலாம்.

16. எதிரியின் வீடு அடுக்கு மாடி வீடா, தனி வீடா அதன் கதவு எண் என்ன என்றால் அடுக்கு மாடி அரசு குடியிருப்பு ஆகும். நான் சோதனைக்கு செல்லும் போது அந்த வீட்டில் வேறு யார் இருந்தார்

என்றால் எதிரியின் மகள் இருந்தார். எதிரியின் தகப்பனார் திரு.M.செல்லையா அங்கிருந்தாரா என்றால் இல்லை. அ.த.சா.ஆ–13 சோதனை ஜாபிதாவில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் எதிரியின் மகள் தான் கையொப்பம் செய்ய வேண்டி கொடுத்தோம். அவர் என்ன வகையில் கையொப்பம் செய்தார் என்று தெரியவில்லை. சோதனை நடந்த நாளில் எதிரியின் வீட்டில் அவரது மகள் சந்திரலேகா இல்லை என்றும் அவர் அப்போது இராமநாதபுரத்தில் இருந்தார் என்றாலும் நான் குறிப்பிடும் அ.த.சா.ஆ–13 ல் உள்ள கையொப்பம் சந்திரலேகா என்பவரின் கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல. சரியாக அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவரது மகளிடம் கொடுத்துதான் கையொப்பம் செய்ய சொன்னோம். அந்த கையொப்பம் அவருடையதா அல்லது வேறு யாரது கையொப்பத்தையும் அவர் போட்டாரா என்று எனக்கு தெரியாது.

17. நான் சொல்வதுபோல் எதிரியின் வீட்டிற்கு நான் செல்லவும் இல்லை. அங்கு வைத்து சோதனை ஜாபிதா தயார் செய்யப்படவில்லை என்றும் அந்த சோதனை ஜாபிதாவை எதிரியின் மகளிடம் நான் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை TPK ரோட்டில் வைத்து தாங்கள் லஞ்ச ஒழிப்பு போலிசார் கைது செய்து விட்டு

வந்த பிறகு எதிரியின் தகப்பனார் எதிரியை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து தனது மகனைக்காண வந்த செல்லையா என்பவரிடம் அந்த கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்து செய்தது சம்பந்தமாக எதிரியின் குடும்ப உறுப்பினர் யாரிடம் தகவல் கொடுக்கப்பட்டது என்றால் அவரது தகப்பனாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அ.த.சா.ஆ.7–ல் 10 Coloumn–ல் உள்ள கையொப்பம் எதிரியின் தகப்பனார் கையொப்பம் என்றால் சரிதான். எங்கு வைத்து அந்த கையொப்பம் செய்தார் என்றால் எந்த இடத்தில் வைத்து செய்தார் என்று ஞாபகமில்லை. உச்ச நீதி மன்ற வழிகாட்டுதலில் சொல்லப்பட்ட முறைப்படி எதிரியை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் லாட்ஜ் மேனேஜரிடம் கடைசி பக்கத்தில் கையொப்பம் வாங்கியதில் தான் செய்த நடைமுறைகள் எதுவும் அவருக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அந்த கட்டிடத்தினை பற்றி குறிப்பு செய்யும்போது 10 வது பக்கத்தில் எழுதும் போது அவர் உடனிருந்தார், அதனால் அவர் கையொப்பம் செய்தார். நான் சொல்வது போல் அ.த.சா.ஆ–12 கைப்பற்றுதல் மகஜர் விஜய் லாட்ஜ்ல் வைத்து நான் சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் அங்கு வைத்து லாட்ஜ்மேனேஜரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றாலும் எதிரியை லஞ்ச ஒழிப்பு பிரிவு

அலுவலகத்திற்கு அழைத்து வந்த பிறகு அங்கு தயாரித்து வைக்கப்பட்டிருந்து கைப்பற்றுதல் மகஜரில் லாட்ஜ் மேனேஜரை சிவகங்கைக்கு வரவழைத்து கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் அறை எண்.308—ல் வைத்து எந்த சோடியம் கார்பனேட் பரிசோனையும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

18. எதிரியிடமிருந்து ஆவணங்கள் எந்த இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது என்றால் எதிரியிடமிருந்து அறை எண்.308—ல் வைத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. எதிரியிடமிடருந்து ரூ.310/— மற்றும் ஒரு மொபைல் போன் மற்றும் நான்கு ஆவணங்கள் எதிரியின் கைப்பையிலிருந்து கைப்பற்றப்பட்டது. எதிரியிடமிடருந்து ரூ.310/— மற்றும் ஒரு மொபைல் போன் மற்றும் நான்கு ஆவணங்கள் எதிரியின் கைப்பையிலிருந்து கைப்பற்றப்பட்டபோது அந்த லஞ்சப்பணத்தில் உள்ள பினாப்தலீன் பவுடர் பட்டிருக்க வாய்ப்பு உள்ளதா என்றால் எதிரியை கைது செய்த பிறகு சோதனை செய்தபோது ரூ.310/—, மொபைல் போன் மற்றும் மற்ற ஆவணங்கள் பரிசோதனை செய்து எடுக்கப்பட்டது. எதிரி தனது கைப்பையிலிருந்து ஆவணங்களை அவரே எடுத்துக்கொடுத்தாரா என்றால் இல்லை. நாங்கள் தான் சோதனை செய்து கைப்பற்றினோம். அந்த விபரத்தை நான் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது

சொன்னேனா என்றால் சொன்னேன். ரூ.310/–, மொபைல் போன் மற்றும் மற்ற ஆவணங்கள் ஆகியவற்றை நான் சோடியம் கார்பனேட் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். அதனால் ரூ.310/– பினாப்தலீன் பவுடர் பட்டிருக்கிறதா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. லஞ்சப்பணத்தை வாங்கி பேண்ட்டின் பின் பாக்கெட்டில் வைத்துவிட்டார். அதனால் சட்டையின் மேல் பாக்கெட்டில் பினாப்தலீன் பவுடர் பட்டிருக்க வாய்ப்பு இல்லை.

19. லஞ்சப்பணத்தை எதிரியிடமிருந்து பெற்றுக்கொண்ட பிறகு எதிரியின் இரு கைகளையும் கழுவச் செய்தோமா என்றால் பரிசோதனை எல்லாம் முடித்த பிறகுதான் கைகளை கழுவச் சொன்னோம்,அவர் கழுவினாரா என்று ஞாபகமில்லை. பரிசோதனை முடிக்கும் முன்பே ரூ.310/–, மொபைல் போன் மற்றும் மற்ற ஆவணங்கள் ஆகியவற்றை அவரே எடுத்துக் கொடுத்தாரா என்றால் இல்லை, நாங்கள்தான் சோதனை செய்து எடுத்தோம். எதிரியின் கீழடிஅலுவலகத்திற்கு சென்ற போது மணி என்ன இருக்கும் என்றால் அதிகாலை ஒரு மணி இருக்கும். அப்போது அங்கு பணியில் இருந்த அலுவலரின் பெயர் என்ன என்றால் திரு.வாழவந்தான் ஆகும். திரு.வாழவந்தானை அந்த அலுவலகத்தில் நாங்கள் செல்வதற்கு முன்பே அவரை தொடர்பு கொண்டு அவரை அங்கு

இருக்கச் சொன்னோமா என்றால் அவரிடம் சொல்லவில்லை. எதிரியின் மேலதிகாரிகளுக்கு தகவல் சொல்லியிருந்தோம். திரு.வாழவந்தான் என்பவருக்கு இரவு 1.00 மணிக்கு அவருக்கு எந்த பணியும் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் எதிரியின் கீழடி அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றாலும், அப்போது திரு.வாழவந்தான் என்பவர் அங்கு இருக்கவில்லை என்றாலும், அவர் முன்னிலையில் எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரியின் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் அனைத்தும் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வாழவந்தானை எடுத்துவரச்சொல்லி அங்கு வைத்து மகஜர் தயார் செய்யப்பட்டு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி அ.சா.2 முருகசாமியிடம் லஞ்சம் கேட்கவும் இல்லை, லஞ்சப்பணம் வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னபடி எந்த பொறிவைப்பு நடவடிக்கையும் விஜய் லாட்ஜில் வைத்து மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

20. எதிரிக்கு மாற்று உடை எங்கிருந்து எடுத்து வந்து கொடுக்கப்பட்டது என்றால் எங்கள் வாகனத்திலிருந்து எடுத்துவந்து கொடுக்கப்பட்டது. அந்த உடையின் நிறம் என்ன என்றால் வெள்ளை நிற

வேட்டி ஆகும். நான் மாற்று உடையாக வெள்ளை வேட்டி கொடுத்ததாக ஆய்வாளர் விசாரணையின்போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எடுத்த பொறிவைப்பு நடவடிக்கை தோல்வி அடைந்துவிடக்கூடாது என்பதற்காக பொய்யான ஆவணங்களை எங்கள் வழக்கிற்கு தோதாக உற்பத்திசெய்து எதிரி மீது பொய் வழக்கு சோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் உண்மையாக சாட்சி சொல்ல முன்வரவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.02.12 18:20:41 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.